ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2481/09 - 2026 මාර්තු මස 24 වැනි අඟහරුවාදා - 2026.03.24
*2481/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டம்**

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106(1), 32 மற்றும் 33ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க**
நாணயக் கொள்கைச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2026 மாச்சு 24.

**இலங்கை மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட விதிகள்**

1. இவ்விதிகள் "2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒதுக்குத் தேவைப்பாடு மீதான விதிகள்" என எடுத்துக்காட்டப்படல் வேண்டும்.

2. இவ்விதிகள் இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 32 மற்றும் 33ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு மத்திய வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பு கட்டமைப்பு தொடர்பில் இத்தால் பின்வரும் விதிகளை வழங்குகின்றது.

1A - G 46508 - 23 (2026/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. சட்டத்தின் 32ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக ஒதுக்குகளைப் பேணுதல் வேண்டும்.

5. (i) சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய மேலே 4ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட அவற்றின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வைத்திருக்கப்பட வேண்டப்பட்ட ஒதுக்குகள் அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் இரண்டு (02%) சதவீதத்திற்கு சமமான தொகையொன்றாக இருத்தல் வேண்டும்.

(ii) மேலே 4ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வைத்திருக்கப்பட வேண்டப்பட்ட ஒதுக்குகள் மத்திய வங்கியில் ரூபா வைப்புக்களின் வடிவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. இவ்விதிகளின் கீழ் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் கணித்தலும் பேணுதலும் அது சார்பில் பணிப்பாளரினால் வழங்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு வருடாந்த ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதிப் பஞ்சாங்கத்திற்கமைவாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

7. இவ்விதிகளின் கீழ் வேண்டப்பட்ட ஒதுக்குகளை கணிக்கும் நோக்கத்திற்காக அவற்றின் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பாகமாக நாணயத் தாள்களையும் குற்றிகளையும் உள்ளடக்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் ஏற்கனவே வழங்கப்பட்ட சலுகை பின்வருமாறு இரு கட்டங்களில் புறக்கீடு செய்யப்படும்.

(i) **கட்டம் 1 –** 2026 ஏப்பிறல் 01 அன்று தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதிக்காக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், சராசரி வைப்புப் பொறுப்புக்களின் இரண்டு சதவீதத்திற்கு (2%) மேலாகவும் அதிகமாகவும் ஆனால் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளின் வடிவில் அவற்றின் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பாகமொன்றாக அதன் இரண்டரை சதவீதத்தினை (2.5%) விஞ்சாதும் பேணலாம் அத்துடன் இரண்டு சதவீதத்திற்கு (2%) மேலாகவும் அதிகமாகவும் அத்தகைய தொகை மாத்திரம் (ஒரு அரை சதவீதம் (0.5%)) மாத்திரம் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பாகமாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(ii) **கட்டம் 2 –** 2026 செத்தெம்பர் 30 அன்று தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதிக்காக அவற்றின் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பாகமாக இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளை உள்ளடக்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதிக்கின்ற சலுகை முழுமையாக புறக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வடிவில் வைத்திருக்கப்படும் தொகை எதுவும் அதன் பின்னர் இவ்விதிகளின் கீழ் ஒதுக்குத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படாது.

8. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணயக் கொள்கைச் சபையினால் கோரப்படக்கூடிய மத்திய வங்கியிலுள்ள ரூபா வைப்புக்கள் தவிர சொத்துக்களின் வடிவில் பேணப்படுவதற்கு வேண்டப்பட்ட ஒதுக்குகள் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் ஊடாக பணிப்பாளரினால் அறிவிக்கப்படும்.

9. இவ்விதிகளின் நோக்கத்திற்காக ஒதுக்குப் பேணும் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச நாளாந்த மீதி தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் ஊடாக பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படும்.

10. (i) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் ஒதுக்குகளில் ஏதேனும் பற்றாக்குறை, காலத்திற்குக் காலம் நாணயக் கொள்கைச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான நிலவுகின்ற ஓரிரவுக் கொள்கை வீதத்தின் இரு (02) தடவைகளுக்குச் சமமான வட்டியொன்றுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) அத்தகைய வட்டி ஆண்டொன்று அடிப்படையில் கணிக்கப்பட்டு ஒதுக்குப் பற்றாக்குறைத் தொகைக்கு நாளாந்த அடிப்படையொன்றில் பிரயோகிக்கப்படும் என்பதுடன் குறைபாட்டுக் காலப்பகுதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(iii) மேலே (i) மற்றும் (ii) ஆம் பந்திகளின் கீழ் ஒதுக்குப் பற்றாக்குறை மீது அறவிடப்படும் வட்டி உரிய ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் மூன்று (3) வேலைநாட்களுக்குப் பிந்தாது கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(iv) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் பேணப்படுகின்ற ஒதுக்குகள் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் மட்டத்திற்குக் கீழ் இருப்பதாக நிர்ணயிக்கப்படுகின்ற போது, பணிப்பாளர் அல்லது அந்நோக்கத்திற்காக பணிப்பாளரினால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர். பின்வருவன உள்ளடங்கலாக உரிய ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் தொடர்ந்துவரும் வேலை நாளில் அறிவித்தலொன்றை வழங்கலாம். –

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் ஒதுக்குகள் வேண்டப்பட்ட ஒதுக்குத் தொகைகளுக்குக் கீழ் உள்ளன எனவும்;
(ஆ) அத்தகைய எந்த ஒதுக்குகளுக்குப் பற்றாக்குறை காணப்பட்டதோ அவ்வொதுக்குகள் தொடர்பிலான காலப்பகுதி;

(இ) அத்தகைய பற்றாக்குறைத் தொகை;
(ஈ) அதன் மீது ஏற்புடைய வட்டித் தொகை; அத்துடன்
(உ) மத்திய வங்கிக்கான அத்தகைய வட்டிக் கொடுப்பனவிற்கான கோரிக்கை

(v) மேலே (iv) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல், ஒதுக்குப் பற்றாக்குறை, அத்தகைய பற்றாக்குறை மீதான வட்டி விதித்தல் அத்துடன் மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டிய மற்றும் செலுத்தத்தக்க வட்டி மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான முறையான அத்துடன் போதுமான அறிவித்தலொன்றாக இருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

11. (i) இவ்விதிகள் 2026 ஏப்பிறல் 01 அன்று வலுவுக்குவருதல் வேண்டும்.

(ii) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1949ஆம் அண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2013 ஏப்பிறல் 12ஆம் திகதிய 1805/39ஆம் இலக்க இலங்கை வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட ‘‘ஒழுங்குவிதி ஈ’’ இத்தால் நீக்கப்படுவதுடன் அது இதன்கீழ் உரியவாறு செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி ஏதேனும் வலுவிலிருத்தல் அல்லது நடைமுறையிலிருத்தல் நிறுத்தப்படுதல் வேண்டும்.

(iii) சூழ்நிலை வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி இவ்விதிகளில் -

‘‘மத்திய வங்கி’’ என்பது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படுதல் வேண்டும்.

‘‘வைப்புப் பொறுப்புக்கள்’’ என்பது கேள்வி வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கால வைப்புக்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் வர்த்தக வங்கியொன்று தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இருப்புக்கள், நாணயக் கடிதங்களுக்கெதிரான பிணைகள் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள், சிறுவர் வைப்புத் திட்டங்கள் மற்றும் அதனையொத்த தன்மையிலான வேறு திட்டங்கள் போன்ற விசேட வைப்புத் திட்டம், ஏதேனும் இருப்பின் அத்துடன் இலங்கை நாணயத்தில் பெயர்குறிக்கப்படுவதன் மூலம் ஆக்கப்பட்ட வைப்புக்களின் விளைவாக அதன் வாடிக்கையாளரின் நம்பிக்கைப் பொறுப்பில் அல்லது சார்பில் வைத்திருக்கப்படும் சொத்துக்களாகவிருக்கின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் அனைத்து அவ்வாறான பொறுப்புக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும். ஆயினும், வர்த்தக வங்கிகளுக்கிடையிலான வைப்புக்களை உள்ளடக்குவதில்லை.

‘‘கேள்வி வைப்புக்கள்’’ என்பது காசோலை, வரைவு அல்லது கட்டளை மூலம் கோரிக்கையின் மீது சட்டபூர்வமான நாணயத்தில் கொடுப்பனவிற்குட்பட்டு இலங்கை ரூபாய்களில் பெயர் குறிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றின் அனைத்து வைப்புப் பொறுப்புக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும். ஆயினும், நிபந்தனைகளின் மீது கொடுப்பனவிற்குட்படுமாயின் ஏதேனும் அத்தகைய பொறுப்பை உள்ளடக்காது.

‘‘பணிப்பாளர்’’ என்பது இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

‘‘குறைந்தபட்ச நாளாந்த மீதி’’ என்பது மத்திய வங்கியில் அவற்றின் நடைமுறைக் கணக்குகளில் வேண்டப்பட்ட ஒதுக்கு மட்டத்துடன் இணங்கியொழுகுவதற்கு நாளாந்த அடிப்படையொன்றில் பேணுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வேண்டப்பட்டுள்ள குறைந்தபட்சத் தொகை எனப் பொருள்படுதல் வேண்டும்.

‘‘நாணயக் கொள்கைச் சபை’’ என்பது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளும் குழுமம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

‘‘ஓரிரவுக் கொள்கை வீதம்’’ என்பது அதன் நாணயக் கொள்கை நிலையினை உத்தியோகபூர்வமாக குறித்துக்காட்டுவதற்கு அத்துடன் தொடர்பூட்டுவதற்கு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வட்டி வீதம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

‘‘ஒதுக்குத் தேவைப்பாடு’’ என்பது உரிமம்பெற்ற வர்த்தக வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 32ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியுடனான காசு வைப்பாகப் பேணுவதற்கு வேண்டப்படுகின்ற வைப்புப் பொறுப்புக்களின் சமவிகிதப் பாகமாகும்.

‘‘ஒதுக்குப் பேணும் காலப்பகுதி பஞ்சாங்கம்’’ என்பது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் வேண்டப்பட்ட ஒதுக்குகளை எக்காலப்பகுதியில் பேண வேண்டுமோ ஒவ்வொரு அக்காலப்பகுதி தொடங்கும் மற்றும் முடிவடையும் திகதிகளைக்

குறித்துரைக்கின்ற ஆண்டொன்றுக்கான ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதிகளை விவரிக்கின்ற சந்தைத் தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் வழங்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட கால அட்டவணை எனப் பொருள்படுதல் வேண்டும்.

''சேமிப்பு வைப்புக்கள்'' என்பது மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு கேள்வி வைப்புக்கள் மற்றும் கால வைப்புக்கள் தவிர இலங்கை நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட அனைத்து வைப்புப் பொறுப்புக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

''கால வைப்புக்கள்'' என்பது முதிர்ச்சிக் காலப்பகுதியொன்றுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் அத்துடன் கேள்வியின் மீது மீளெடுக்கமுடியாத மற்றும் வட்டியுடன் மீள்செலுத்தப்படுகின்ற இலங்கை நாணயத்தில் பெயர் குறிக்கப்பட்ட அனைத்து வைப்புப் பொறுப்புக்களும் எனப் பொருள்படுதல் வேண்டும்.

EOG 03 - 0203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது